**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 153** **நாள்: 16.05.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.ஜே.சி.டி.பிரபாகர் அவர்கள், சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அவ்வை சண்முகம் சாலை, சிவசண்முகபுரம், எம்.கே.இராதா நகர் பகுதியில் வசிக்கும் பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.ஜே.சி.டி.பிரபாகர் அவர்கள், இன்று (16.05.2026) சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி, வார்டு-118, அவ்வை சண்முகம் சாலைப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதியில், அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதி மக்களிடம் குறைகளை கேட்டறிந்து அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-117, சிவசண்முகபுரம், எம்.கே.இராதா நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதியில் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதியில் வசிக்கும் பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த நிகழ்வின்போது ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் பெரும்பான்மையான வாக்குவாக்குகளை தனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்தமைக்காக வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியினை தெரிவித்தார்.

**இந்நிகழ்வுகளில் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-**

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் நம்முடைய போற்றுதலுக்குரிய முதலமைச்சர் அவர்களுடைய ஆசிர்வாதத்தில் வெற்றி பெற்ற பிறகு மக்களுக்கு நன்றி சொல்லுகிற அந்தப் பணியை சற்று வித்தியாசமாக மக்களைச் சந்தித்து ஏற்கனவே தெரிந்து கொண்ட பிரச்சனைகளை எப்படி தீர்க்க இருக்கிறோம் என்பதை நேரடியாகச் சொல்லுகிற ஒரு பணியை இன்றைக்கு துவங்கி உள்ளேன். ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் பெருவாரியான வாக்குகளை எனக்கு அளித்து வெற்றி பெறச் செய்த வாக்காள பெருமக்களுக்கு நான் எனது நன்றியை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி பல்வேறு பிரச்சனைகளை கொண்டிருக்கிற தொகுதி என்பதை நான் தேர்தலில் நிற்கும் பொழுது கண்டறிந்தேன். ஆயிரம் விளக்கு தொகுதியில் உள்ள அவ்வை சண்முகம் சாலையில் சிறிய சந்துகளில் குடியிருக்கும் குடும்பங்கள் நான்கு ஐந்து தலைமுறைகளாக குடியிருக்கிறார்கள். நான் வேட்பாளராக தேர்தல் பிரச்சாரத்தின் போது இப்பகுதிக்கு வந்த பொழுது நிறைய கோரிக்கைகளை என்னிடம் தெரிவித்தனர். அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவேன் என மக்களுக்கு வாக்குறுதி அளித்தேன். நான் வெற்றி பெற்ற பிறகு வருகிற முதல் இடமாக அவ்வை சண்முகம் சாலை இருக்கும், இங்கு நான் வந்து உங்களை பார்ப்பேன் என வாக்குறுதி அளித்தேன் அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதத்தில் இப்பகுதிக்கு வருகை தந்து ஆய்வு செய்தேன்.

அவ்வை சண்முகம் சாலையில் குடியிருக்கும் மக்களுக்கு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் கழிவு நீர் பிரச்சனை முற்றிலுமாக தீர்க்கப்படும் ஒரு மாத காலத்திற்குள் தற்காலிக சாலை அமைக்கப்படும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் சாலை வசதிகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அதேபோல எம். கே இராதா நகர் மற்றும் சிவ சண்முகபுரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் ஆய்வு செய்த பொழுது இங்கே கழிவு நீர் எப்படி தேங்கி உள்ளது. பாருங்கள் என பொதுமக்கள் என்னை அழைத்துச் சென்று காட்டினார்கள். உடனடியாக கழிவு நீரை அகற்ற வேண்டும். நிரந்தரமாக கழிவுநீர் தங்கு தடையின்றி செல்வதற்கான வசதியை இங்கு முறைப்படுத்த வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டேன். அலுவலர்கள் பத்து நாட்களுக்குள்ளாக முடிப்பதாக கூறினார்கள். நான் கூறினேன் இன்னுக் கூட அஞ்சு நாட்கள் அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள். பதினைந்து நாட்களுக்குள் முடித்திட வேண்டும். இந்த இடத்தை நான் திரும்ப வந்து பார்க்கிறபோது மக்கள் இந்த அரசுக்கும், முதலமைச்சருக்கும் கையெடுத்து நன்றி கூறுகிற அளவுக்கு இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளேன்.

எம். கே இராதா நகர் மற்றும் சிவ சண்முகபுரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பழைய வீடுகளாகிவிட்டது. புதிய வீடு கட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. அவற்றுக்கான திட்டங்கள் எல்லாம் முறைப்படி தயார்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான அறிவிப்பினை அறிவிப்பார்கள். பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு புதிய வீடுகள் இங்கே உள்ளவர்களுக்கே ஒதுக்கப்படுகிற அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதே போன்று நக்கீரன் நகருக்கும், சிவசண்முகபுரம் பகுதிக்கும் ஏற்கனவே குடியிருப்பு இடிப்பதற்கான அந்த உத்தரவு பெறப்பட்டுவிட்டது.

விரைவில் அந்தப் பணிகளைத் துவங்கியுள்ளோம். குடியிருப்பு இடிக்கிற வரை கழிவு நீர் தேங்காதபடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டு உள்ளேன்.

இப்பகுதி வசிக்கும் மக்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் என்னிடம் கூறுங்கள் நீங்கள் நலமுடன் வளமுடன் வாழ்வதற்கான வசதிகளை செய்து தருவதாக தெரிவித்துள்ளேன்.

மக்களுக்கு அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வது என்னுடைய அடிப்படை கடமையாக நினைக்கிறேன். இறைவன் அருளால் மக்கள் போற்றுகின்ற, மக்கள் விரும்புகிற ஒரு முதலமைச்சரை பெற்றிருக்கிறோம். நிச்சயமாக அவருடைய அனுமதியோடு, ஆசியோடு இந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றுவேன் என்பதை நான் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயிரம் விளக்கு தொகுதியில் 1,000 பணிகள் என்ற தலைப்பில் எல்லா பணிகளும் செய்ய இருக்கிறோம். நாளை மாலை ஆயிரம் விளக்கு தொகுதியில் உள்ள அனைத்து விளையாட்டு மைதானங்களுக்கும் செல்ல இருக்கிறோம். மைதானங்களில் விளையாடும் விளையாட்டு வீரர்களுக்கு என்னென்ன தேவை இருக்கிறது என்பதை கேட்டறிந்து அவர்களுக்கு தேவையான பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம். விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். ஆயிரம் விளக்கு தொகுதியில் உள்ள அனைத்து பொதுநல சங்கங்களையும் வட்டங்கள் வாரியாக அழைத்து அவர்களை இணைத்து மக்கள் பணிகள் செய்யப்படும்.

எதை எப்போது செய்ய வேண்டும் என்பதை நன்றாக நம்முடைய முதல்வர் அறிந்துள்ளார். அதற்கு ஏற்றார் போல் குறித்த நேரத்தில் பொதுமக்களுக்கு தேவைப்படும் அனைத்தையும் நம் முதல்வர் செய்வார். அதிமுகவில் உள்ள இரண்டு தரப்பினரும் கொறடா நியமிப்பது தொடர்பாக மனுக்களை அளித்துள்ளனர். அத்தனை மனுக்களும் ஆய்வில் உள்ளது. உரிய நேரத்தில் உரிய முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**